## 1. காய்கறிப் பயிர்களுக்கான உர அட்டவணை

**தண்டுக்கீரை**

எக்டருக்கு தொழு உரம் 25 டன், அசோஸ்பைரில்லம் 2 கிலோ மற்றும் பாஸ்போபாக்டீரியா 2 கிலோ, தழைச்சத்து 75 கிலோ, மணிச்சத்து 50 கிலோ, சாம்பல் சத்து 25 கிலோ உரங்களை அடியுரமாக அளிக்கவேண்டும்.

**செடி முருங்கை**

செடி ஒன்றிற்கு 45 கிராம் தழைச்சத்து 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்சவேண்டும். மேலும் ஆறாவது மாதத்தில் தழைச்சத்தை மட்டும் ஒரு செடிக்கு 45 கிராம் என்ற அளவில் இடவேண்டும்.

**சாம்பல் பூசணி**

குழி ஒன்றுக்கு 10 கிலோ தொழு எரு மற்றும் கலப்பு உரம் (6:12:12) தழை:மணி:சாம்பல் சத்து), 100 கிராம் இட்டு நீர்ப்பாய்ச்சவேண்டும். 30 நாட்கள் கழித்து ஒரு குழிக்கு 10 கிராம் யூரியா என்ற அளவில் மேலுரம் இடவேண்டும்.

**குழந்தை மக்காச்சோளம்**

அடியுரமாக எக்டருக்கு 12.5 டன்கள் மக்கிய தொழு உரம், 75 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றை இடவேண்டும். அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்தை எக்டருக்கு இரண்டு கிலோ என்ற அளவில் இட்டால், பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தில் 25 சதவிகிதம் இடுவதைக் குறைக்கலாம். மேலுரமாக விதைத்த 25வது நாளில் 75 கிலோ தழைச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். மேலுரம் இடுவதற்கு முன்பாக களை எடுத்தவிட்டு மேலுரம் இடவேண்டும்.

**பீட்ரூட்**

அடியுரமாக எக்டருக்கு 20 டன் மக்கிய தொழு உரம், 60 கிலோ தழைச்சத்து, 160 கிலோ மணிச்சத்து, 100 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். 30 நாட்கள் கழித்து 60 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

**பெல்லாரி வெங்காயம்**

கடைசி உழவின்போது எக்டருக்கு 25 டன் மக்கிய தொழுஉரம், 50 கிலோ துத்தநாக சல்பேட் ஆகியவற்றை இட்டுக்கலந்து விடவேண்டும். பின்பு தேவையான அளவில் பாத்திகள் அமைத்திடவேண்டும். நடவு செய்யும் முன்னர் ஒரு எக்டருக்கு அசோஸ்பைரில்லம் 2 கிலோ, பாஸ்போபாக்டீரியா 2 கிலோ, 50 கிலோ தழைச்சத்து, மணிச்சத்து 150 கிலோ சாம்பல் சத்து, 75 கிலோ கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும். நாற்று நட்ட 30 நாட்கள் கழித்து மேலுரமாக தழைச்சத்து 50 கிலோ கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும்.

**வெண்டை**

அடியுரமாக எக்டருக்கு 25 டன் மக்கிய தொழுஉரம், 20 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 30 கிலோ சாம்பல் சத்து வரிகளில் ஒரு பக்கத்தில் இட்டு மண்ணுடன் நன்கு கலந்துவிடவேண்டும். நட்ட 30 நாட்கள் கழித்து மேலுரமாக 20 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போ பாக்டீரியம் நுண்ணுயிர் கலவையை 100 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து நேரடியாக மண்ணில் இட்டு, தழைச்சத்தின் தேவையை குறைத்துக் கொள்ளலாம்.

**பாகற்காய்**

ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம் 10 கிலோ இடவேண்டும். இத்தோடு அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவையை 100 கிராம் அளவுக்கு இடவேண்டும். மேலுரமாக பூக்கும் தருணத்தில் ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழைச்சத்தை இடவேண்டும்.

**சுரைக்காய்**

ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம் 10 கிலோ இடவேண்டும். இத்தோடு அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்ற அளவில் தழை, மணி மற்றும்

சாம்பல் சத்துக் கலவையை 100 கிராம் அளவுக்கு இடவேண்டும். மேலுரமாக பூக்கும் தருணத்தில் ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழைச்சத்தை இடவேண்டும்.

**கத்தரி**

அடியுரமாக எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம், 50 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். 30 நாட்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். நடவின் போது எக்டருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றுறம் பாஸ்போபாக்டீரியாவை இடவேண்டும்.

**பட்டை அவரை**

அடியுரமாக எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம், 50 கிலோ மணிச்சத்து மற்றும் 25 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். விதைத்த 20-25 நாட்கள் கழித்து 25 கிலோ தழைச்சத்து மற்றும் 25 கிலோ சாம்பல் சத்தும் 40-45 நாட்கள் கழித்து 25 கிலோ தழைச்சத்தும் இடவேண்டும்.

**முட்டைக்கோசு**

**மலைப்பகுதிகளுக்கு**

அடியுரமாக எக்டருக்கு 30 டன் மக்கிய தொழு உரம், 90 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து, 90 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். நடவு செய்த 30 - 45 நாட்கள் கழித்து 45 கிலோ தழைச்சத்து, 45 கிலோ மணிச்சத்து, 45 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும்.

**சமவெளிப்பகுதிகளுக்கு**

அடியுரமாக எக்டருக்கு 20 டன் மக்கிய தொழு உரம், 2 கிலோ அசோஸ்பைரில்லம், 50 கிலோ தழைச்சத்து, 125 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். நடவு செய்த 30 நாட்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்தை அளித்து மண்ணனைக்க வேண்டும்.

**குடைமிளகாய்**

கடைசி உழவின்போது ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரம், 40:60:30 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் கத்து இடவேண்டும். நடவு செய்த 30,60 மற்றும் 90வது நாளில் 40 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடவேண்டும்

**கேரட்**

ஒரு எக்டருக்கு அடியுரமாக 30 டன் தொழு உரத்தை மண்ணுடன் கலக்கவேண்டும். பிறகு 90 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து, 90 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். இதனுடன் 25 கிலோ துத்தநாக சல்பேட்டையும் இடவேண்டும்.

**காலிஃபிளவர்**

**மலைப்பகுதிகளுக்கு:** நிலம் தயார் செய்யும்போது எக்டருக்கு 30 டன் தொழு உரம் இட்டு நன்கு கலந்துவிடவேண்டும். அடியுரமாக எக்டருக்கு 90 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து, 90 கிலோ சாம்பல் சத்து அளிக்கவேண்டும். பிறகு நட்ட 45 நாட்கள் கழித்து மேலுரமாக 45:45:45 என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை இடவேண்டும்.

**சமவெளிப்பகுதிகளுக்கு:** நிலம் தயார் செய்யும்போது எக்டருக்கு 15 டன் தொழு உரம் இட்ட மண்ணுடன் நன்கு கலந்துவிடவேண்டும். அடியுரமாக எக்டருக்கு 50 கிலோ தழைச்சத்து, 100 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல்சத்து இடவேண்டும். பிறகு நட்ட நாட்கள் கழித்து மேலுரமாக 50 கிலோ தழைச்சத்துடன் 2 கிலோ இரசாயன உரம் கலக்காத காய்கறிப் பயிருக்கான நுண்ணூட்டக் கலவையை இடவேண்டும்.

**மிளகாய்**

அடியுரமாக எக்டருக்கு 25 டன் தொழு உரம், 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். மானாவாரி அல்லது இறவைப்பயிர் இரண்டிற்கும் தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவேண்டும். நடவு செய்த 30, 60 மற்றும் 90ம் நாள் ஒவ்வொரு முறையும் எக்டருக்கு 30 கிலோ வீதம் இடவேண்டும்.

**சௌசௌ**

கொடிகள் பூக்க ஆரம்பிக்கும் பொழுதும் கவாத்து செய்த பிறகும் குழி ஒன்றுக்கு 250 கிராம் யூரியா இட்டு நீர் பாய்ச்சவேண்டும்.

**கொத்தவரை**

கடைசி உழவின் போது ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 25 டன், அசோஸ்பைரில்லம் 2 கிலோ, பாஸ்போபேக்டீரியா 2 கிலோ, தழைச்சத்து 25 கிலோ, 50 கிலோ மணிச்சத்து மற்றும் 25 கிலோ சாம்பல் சத்து அடியுரமாக இடவேண்டும். நடவு செய்த 30வது நாளில் ஒரு எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்தினை மேலுரமாக இடவேண்டும்.

**சிறுகிழங்கு அல்லது கூர்க்கன் கிழங்கு**

நடவு செய்த இரண்டு மாதங்கள் கழித்து எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 150 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும். நடவு செய்த 30ம் நாளில் மண் அணைக்கும் போது 30 கிலோ தழைச்சத்து மற்றும் 2 கிலோ அசோஸ்பைரில்லம் இடவேண்டும்.

**கருணைக்கிழங்கு**

கடைசி உழவின்போது மக்கிய தொழுஉரம் ஒரு எக்டருக்கு 25 டன் என்ற அளவில் இடவேண்டும். மேலும் தழைச்சத்து 20 கிலோ மணிச்சத்து 30 கிலோ மற்றும் சாம்பல்சத்து 60 கிலோ அடிஉரமாக இடவேண்டும். மேலும் நடவு செய்த 45வது நாள் 20,30 மற்றும் 60 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடவேண்டும்.

**வெள்ளரி**

அடியுரமாக எக்டருக்கு 40 டன் தொழு உரம் மற்றும் விதைத்த 30 ஆம் நாளில் 35 கிலோ தழைச்சத்து இடவேண்டும்.

**கருவேப்பிலை**

ஒவ்வொரு அறுவடைக்கு பின்னரும் ஒரு செடிக்கு 20 கிலோ மக்கிய தொழு உரம் இட்டு மண்ணுடன் கலந்து விடவேண்டும்.

**வள்ளிக்கிழங்கு**

கடைசி உழவின்போது மக்கிய தொழுஉரம் ஒரு எக்டருக்கு 25 டன் என்ற அளவில் இடவேண்டும். கிழங்குகளை நடுவதற்கு முன்பு எக்டருக்கு 40 கிலோ தழைச்சத்து 60 கிலோ மணிச்சத்து, 120 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும். நட்ட 30 நாட்கள் கழித்து எக்டருக்கு 4 கிலோ அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்துடன் 40 கிலோ மணல் கலந்து இடவேண்டும். நட்ட 90 நாட்கள் கழித்து 50 கிலோ தழைச்சத்து மற்றும் 120 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய உரங்களை மேலுரமாக இடவேண்டும்.

**சேனைக்கிழங்கு**

கடைசி உழவின்போது 25 டன் மக்கிய தொழு எரு இட்டு மண்ணுடன் நன்றாகக் கலக்கச் செய்யவேண்டும். நட்ட இரண்டு மாதத்திற்குப் பின்பு எக்டருக்கு 80 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 100 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும்.

**ப்ரெஞ்சு அவரை வகைகள்**

கடைசி உழவின் போது எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் இட்டு மண்ணுடன் கலக்கச் செய்யவேண்டும். எக்டருக்கு தேவையான உர அளவு தழைச்சத்து 90 கிலோ மணிச்சத்து 125 கிலோ, சமவெளிப் பகுதிகளில் அடியுரமாக 62.5 கிலோ மணிச்சத்து இடவேண்டும்.

**வெள்ளைப்பூண்டு**

எக்டருக்கு 50 கிலோ மக்கிய தொழு உரம் இட்டு கலந்து விடவேண்டும். பிறகு எக்டருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போபேக்டீரியா, 40 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து, 75 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்கள், 50 கிலோ மெக்னீசியம் சல்பேட், ஒரு டன் வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை அடியுரமாக இட்டு மண்ணுடன் கலந்துவிடவேண்டும். நட்ட 45 நாட்கள்

கழித்து எக்டருக்கு 35 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை இடவேண்டும்.

**கெர்கின் (அ) சீமை வெள்ளரி**

தழைச்சத்து 150 கிலோ, மணிச்சத்து 75 கிலோ மற்றும் 100 கிலோ சாம்பல் சத்துக்களை மூன்று பங்காக பிரித்து அடிஉரம், நடவு செய்த மூன்றாவது மற்றும் ஐந்தாவது வாரத்தில் இடுதல்வேண்டும்.

**அவரை**

**அ) குற்று வகைகளுக்கு (அடியுரம்) எக்டருக்கு**

| எரு மற்றும் உரங்கள் | இறவை பயிருக்கு | மானாவாரி பயிருக்கு |
|---|---|---|
| தொழு உரம் (டன்) | 12.5 | 12.5 |
| தழைச்சத்து (கிலோ) | 25 | 12.5 |
| மணிச்சத்து (கிலோ) | 50 | 25 |

**ஆ) பந்தல் வகைகளுக்கு:** நிலம் தயாரிக்கும் போது எக்டருக்கு 20 டன் (குழி ஒன்றுக்கு 10 கிலோ) நன்கு மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின் பொது இட்டு உழவேண்டும். அடியுரமாக குழி ஒன்றுக்கு 6:12:12 (தழை:மணி:சாம்பல்) கலப்பு உரம் 100 கிராம் இடவேண்டும். விதைக்கும் போது எக்டருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியம் இடவேண்டும். விதைத்த 30 நாட்கள் கழித்து குழி ஒன்றுக்கு 10 கிராம் தழைச்சத்து இடவேண்டும்.

**முலாம்பழம்**

விதைப்பிற்கு முன் ஒரு எக்டருக்கு 20 டன் மக்கிய தொழு உரம், 40:60:30 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடிஉரமாகவும் விதைத்த முப்பதாவது நாளில் 40 கிலோ தழைச்சத்தை மேலுரமாகவும் இடவேண்டும்

**பட்டாணி**

விதைப்பிற்கு முன் ஒரு எக்டருக்கு 20 டன் மக்கிய தொழு உரம், 60:80:70 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடிஉரமாகவும் விதைத்த முப்பதாவது நாளில் 60 கிலோ தழைச்சத்தை மேலுரமாகவும் இடவேண்டும்.

**உருளைக்கிழங்கு**

ஒரு எக்டருக்கு அடியுரமாக 15 டன் மக்கிய தொழு உரம், 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியம், 60 கிலோ தழைச்சத்து, 120 கிலோ மணிச்சத்து, 60 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய இராசயன் உரங்களை அடியுரமாக இடவேண்டும். இதனுடன் எக்டருக்கு 60 கிலோ மக்னீசியம் சல்பேட்டையும் அடியுரமாக இடவேண்டும். பிறகு விதைத்த 30 நாட்கள் கழித்து 60 கிலோ தழைச்சத்து, 120 கிலோ மணிச்சத்து 60 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை மேலுரமாக இட்டு மண் அணைக்கவேண்டும்.

**பரங்கிக்காய்**

ஒரு குழிக்கு அடியுரமாக 10 கிராம் மக்கிய தொழு உரம் (ஒரு எக்டருக்கு 20 டன்), 6:12:12 (தழை:மணி:சாம்பல்) கலப்பு உரம் 100 கிராம் மற்றும் விதைத்த 30 நாட்கள் கழித்து 10 கிராம் தழைச்சத்து இடவேண்டும்.

**முள்ளங்கி**

நன்கு மக்கிய தொழு எரு எக்டருக்கு 25 டன் கடைசி உழவின்போது இட்டு மண்ணுடன் நன்கு கலக்கவேண்டும். விதைப்பதற்கு முன் அடியுரமாக 25 கிலோ தழைச்சத்து 100 கிலோ மணிச்சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். விதைத்த 30 நாட்கள் கழித்து 25 கிலோ தழைச்சத்து மேலுரமாக இடவேண்டும்.

**பீர்க்கங்காய்**

ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம் 10 கிலோ இடவேண்டும். இத்தோடு அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவையை 100 கிராம் அளவுக்கு இடவேண்டும். மேலுரமாக பூக்கும் தருணத்தில் ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழைச்சத்தை இடவேண்டும்.

**சின்னவெங்காயம்**

எக்டருக்கு அடியுரமாக 25 டன் மக்கிய தொழு உரம், 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போபாக்டீரியம், 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து மற்றும் 30 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை

அளிக்கவேண்டும். விதைத்த 30 நாட்கள் கழித்து 30 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

**புடலங்காய்**

ஒவ்வொரு குழிக்கும் மக்கிய தொழு உரம் 10 கிலோ இடவேண்டும். இத்தோடு அடியுரமாக ஒவ்வொரு குழிக்கும் 6:12:12 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவையை 100 கிராம் அளவுக்கு இடவேண்டும். மேலுரமாக பூக்கும் தருணத்தில் ஒவ்வொரு குழிக்கும் 10 கிராம் தழைச்சத்தை இடவேண்டும்.

**சர்க்கரைவள்ளிக்கிழங்கு**

எக்டருக்கு அடியுரமாக 25 டன் மக்கிய தொழு உரம், 20 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து, 60 கிலோ சாம்பல் சத்தை இடவேண்டும். முப்பது நாட்கள் கழித்து மறுபடியும் அதே அளவு தழை, மணி, சாம்பல் சத்துக்களை இட்டு மண் அணைக்கவேண்டும். எக்டருக்கு 20 கிலோ அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்தை அளித்தால் பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தில் மூன்றில் இரண்டு பங்கைக் குறைத்து இடலாம்.

**மரவள்ளிக்கிழங்கு**

**இறவைப்பயிர்**

நன்கு மக்கிய தொழு எரு எக்டருக்கு 25 டன் கடைசி உழவின்போது இட்டு மண்ணுடன் நன்கு கலக்கவேண்டும். எக்டருக்கு 45:90:120 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடிஉரமாகவும் நடவு செய்து 90 நாட்களுக்கு பிறகு 45:120 கிலோ தழை மற்றும் சாம்பல் சத்தை மேலுரமாகவும் இட்டு மண் அணைக்கவேண்டும்.

**மானாவாரிப்பயிர்**

எக்டருக்கு நன்கு மக்கிய தொழு எரு 12.5 டன், 50:65:125 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவேண்டும். நடவு செய்த 30 - 60 நாட்களுக்கு பிறகு மழை பொழிந்தவுடன் 2 கிலோ அசட்டோபாக்டரை கலவையை (2 கிலோ அசட்டோபாக்டர் + 20 கிலோ தொழு எரு + 20 கிலோ மண்) மண்ணில் இடவேண்டும்.

**டின்டா**

ஒரு எக்டருக்கு 10 டன் தொழு உரம், 20 கிலோ தழைச்சத்து, உரத்தை அடியுரமாக இடவேண்டும். மேலும் நடவு செய்த 30வது நாளில் 20 கிலோ தழைச்சத்து இடவேண்டும்.

**தக்காளி**

அடியுரமாக எக்டருக்கு தொழு உரம் 25 டன், தழைச்சத்து 75 கிலோ, மணிச்சத்து 100 கிலோ, சாம்பல் சத்து 50 கிலோ, போராக்ஸ் 10 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட் 50 கிலோ இடவேண்டும். நட்ட 30ம் நாள் தழ்ைசசத்து 75 கிலோ இட்டு மண் அணைக்கவேண்டும். நாற்று நட்ட 15ம் நாள் ட்ரைகோன்டனால் 1 பிபிஎம் என்ற அளவில் பூக்கும் தருணத்தில் தெளிக்கவேண்டும். இவ்வாறு தெளிப்பதினால் மகசூலை அதிகரிக்க செய்யலாம்.

**காய்கறி தட்டைப்பயிறு**

இறவைப்பயிருக்கு ஒரு எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம், 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போபாக்டீரியா, 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து இடவேண்டும். மானாவாரிப் பயிருக்கு ஒரு எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து இடவேண்டும்.

**தர்பூசணி**

எக்டருக்கு அடியுரமாக 20 டன் மக்கிய தொழு உரம், 55 கிலோ மணிச்சத்து, 55 கிலோ சாம்பல் சத்தை இடவேண்டும். முப்பது நாட்கள் கழித்து 55 கிலோ தழைச்சத்து இடவேண்டும்.

**பிற காய்கறிப் பயிர்கள்**

| பெயர் | எரு மற்றும் உரங்கள் |
|---|---|
| அஸ்பாரகஸ் | அடியுரமாக ஒரு எக்டருக்கு தழைச்சத்து 50 கிலோ, மணிச்சத்து 10 கிலோ, சாம்பல் சத்து 15 கிலோ |
| பேசல்லா (பருப்பு கீரை) | குழிக்கு 10 கிலோ மக்கிய தொழு உரம் |
| பட்டர் பீன்ஸ் | ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 20-30 டன்கள், 40:50:50 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து |

| | |
|---|---|
| சிலரி | மேலுரமாக ஒரு எக்டருக்கு தழைச்சத்து 140 கிலோ, மணிச்சத்து 55 கிலோ மற்றும் சாம்பல் சத்து 220 கிலோ |
| சக்ரவர்த்தி கீரை | அடியுரமாக ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 25 டன் தழை, மணி, சாம்பல் சத்து 25:25:25 கிலோ மற்றும் 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றம் பாஸ்போபாக்டீரியா |
| செக்குர்மணிஸ் கீரை | ஒரு செடிக்கு 5-10 கிலோ தொழு உரம் |
| சைனிஸ் முட்டைகோசு | ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரமாக 10 டன்கள், தழைச்சத்து 90 கிலோ, மணிச்சத்து 125 கிலோ, சாம்பல் சத்து 100 கிலோ. மேலுரமாக தழைச்சத்து 90 கிலோ |
| கோவைக்காய் | எக்டருக்கு மக்கிய தொழு உரம் 10 டன், தழைச்சத்து 75 கிலோ, மணிச்சத்து 40 கிலோ, சாம்பல் சத்து 75 கிலோ |
| நூல்கோல் | அடியுரமாக தொழு உரம் 30 டன் மகசூல், மேலுரமாக 180:120:100 கிலோ தழை, மணி, சாம்பல்சத்து |
| லெட்டூஸ் | அடியுரமாக ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 30 டன், தழைச்சத்து 50 கிலோ, மணிச்சத்து 30 கிலோ, சாம்பல்சத்து 30 கிலோ. மேலுரமாக அதே அளவு உரத்தை இடவேண்டும். |
| பாலக்கீரை | ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 25 டன்கள், தழைச்சத்து 60 கிலோ, மணிச்சத்து 60 கிலோ, சாம்பல் சத்து 60 கிலோ |
| ருபார்ப் | 1:1:1 உரக்கலவை |

| | |
|---|---|
| டர்னிப் | ஒரு எக்டருக்கு அடியுரமாக மக்கிய தொழு உரம் 30 டன், தழைச்சத்து 90 கிலோ, மணிச்சத்து 125 கிலோ, சாம்பல் சத்து 100 கிலோ, மேலுரமாக ஒரு எக்டருக்கு 90 கிலோ தழைச்சத்து |
| விங்கிடு பீன்ஸ் | ஒரு எக்டருக்கு அடி உரமாக 10 டன், தழைச்சத்து 40 கிலோ, மணிச்சத்து 100 கிலோ, சாம்பல் சத்து 25 கிலோ |